**தலைப்பு 136 – விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

## I ஆம் பகுதி

**விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 219 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதிஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 2,850,500,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 2,183,250,470 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் திணைக்களத்தின் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 276,290,730 மற்றும் ரூபா 390,958,800 அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் முறையே 31 சதவீதம் மற்றும் 20 சதவீதம் ஆகக் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
| --- | --- | --- | --- | --- |
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 136 | 895,273,000 | 618,982,270 | 276,290,730 | 31 |
| 219 | 1,955,227,000 | 1,564,268,200 | 390,958,800 | 20 |
| மொத்தம் | 2,850,500,000 | 2,183,250,470 | 667,249,530 | 23 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 13601 | 6,000,000 | 5,091,121 | 2,800,000 | 3,716,575 | 24,000,000 | 12,677,245 |
| 21901 | 8,000,000 | 7,838,703 | 4,000,000 | 7,008,815 | 33,000,000 | 25,679,727 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் மீதிகள் ரூபா 222,219,628 கூட்டுமொத்தமாக இருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (i) | விளையாட்டுத் துறை அமைச்சு | 6000/0000/00/0015/0048/000 | 22,145,192 |
| (ii) | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் | 6000/0000/00/0015/0100/000 | 200,074,436 |
| | மொத்தம் | | 222,219,628 |

## 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

### 1. தலைப்பு 136 – விளையாட்டுத்துறை அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

விளையாட்டுத்துறை அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 சனவரி 13 ஆந் திகதியன்று அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுல்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், விளையாட்டுத்துறை அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றுக்களும் இங்கே (அ) இலிருந்து (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாதிருந்த அதே நேரம் ஏனைய சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை கணக்காய்வு தெரிவுச் செய்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (ii) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |

### (ஆ) பொது வைப்புக் கணக்கு

நி.பி 565(4) இன் பிரகாரம் பொது வைப்புப் பேரேடு ஒவ்வொரு வருடத்திற்காகவும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு கணக்கு மீதியையும் இணக்கம் செய்து ஒவ்வொரு விடயமும் தனித்தனியாக புதிய பேரேட்டிற்கு முன்கொண்டுவர வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படாதிருந்ததுடன் நி.பி 565(5) இன் படி ஒவ்வொரு மாதத்திற்காகவும் பொது 71 மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய மாதாந்த வைப்புப் பொழிப்புக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அமைச்சினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பாடாதிருந்ததுடன் 12 செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 1,557,694 தொகையான பொறுப்புக்களுக்காக கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.5 செயலாற்றல்

2013 இன் வருடாந்த பாதீடு மதிப்பீடு/ செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

### 1.5.1 தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் விளையாட்டு மைதான வசதிகள் கிடைக்கத்தக்கனவாக இருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டில் பிரயோகப் பயிற்சிக்காக வெளி நிறுவனங்களிடமிருந்து வாடகைக்குப் பெறப்பட்டிருந்த விளையாட்டு மைதானத்திற்காக ரூபா 109,750 தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற ஒவ்வொரு பாடநெறிகளுக்காகவும் பரீட்சை வினாப் பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் விடையளித்தல் பத்திரங்களை மதிப்பாய்வு செய்தல் அந்ததந்த பாடங்களுக்கு உரிய விரிவுரையாளர் குழுவொன்றினாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இது நிறுவகத்தின் சுயாதீனத்திற்கு மோசமான பாதிப்பினை ஏற்படுத்துகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2013 ஆம் ஆண்டில் நடாத்துவதற்காகத் திட்டமிடப்பட்ட பாடநெறிகள் மற்றும் நடாத்தப்பட்ட பாடநெறிகள் தொடர்பாக பரீட்சித்த போது விளையாட்டுத்துறை முகாமைத்துவ பாடநெறி மற்றும் பயிற்சியாளர்களுக்கான நீச்சல் உயர் பாடநெறி திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நடாத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிர்வாகப் பிரிவு, உடற்பயிற்சிப் பிரிவு, பாடநெறிப் பிரிவு மற்றும் பயிற்சியாளர்களைப் பதிவு செய்தல் பிரிவுகளின் பொருட் பதிவேடு தனித்தனியாகப் பேணப்படாதிருந்ததுடன் பிரதான பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட பிரிவுகளிலுள்ள் சொத்துக்களின் விபரங்களை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) விளையாட்டுப் பாடசாலைகளில் காணப்பட்ட 05 பதவி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

விளையாட்டு மருத்துவ நிறுவகத்திற்காக கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.1.1(அ) பந்தியின் பிரகாரம் தொழில்நுட்ப விபரக்குறிப்புக்களின்றி விளையாட்டு மருத்துவ நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பெயர் குறிப்பிடப்பட்ட 06 வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளுக்குப் புறம்பாக விளையாட்டுத்துறை அமைச்சினால் Medical Treadmill இயந்திரமொன்றும் Cardio Coach V02 Quick Start Kit இயந்திரமொன்றும் வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் கோரி ரூபா 3,850,000 தொகைக்கு தனியார் நிறுவனமொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 1.7 மனிதவள முகாமைத்துவம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | | ஊழியர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | **ஊழியர்களின் வகை** | **அங்கீகரிக்கப்பட்டது** | **உள்ளபடியானது** | **வெற்றிடங்கள்** |
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 21 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 12 | 08 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 90 | 67 | 23 |
| (iv) | ஆரம்ப நிலை | 74 | 63 | 11 |
| | மொத்தம் | 200 | 159 | 41 |

**(ஆ) விளையாட்டு மருத்துவ நிறுவகத்திற்கு உடற்பயிற்சியளித்தல் தரம் III இல் உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல்**

---

2012 நவம்பர் 23 ஆந் திகதி உடற்பயிற்சியளித்தல் தரம் III இற்கு 06 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விளையாட்டு மருத்துவ நிறுவகத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் 7.2.4.2 ஆம் பந்தியின் படி தொழிற்தகைமைப் பரிசோதனையில் சித்தியடையும் புள்ளி மட்டம் 50 சதவீதமாக இருக்க வேண்டிய போதிலும் பாடநெறிப் பணிப்பாளரினால் உரிய புள்ளி மட்டம் 35 சதவீதம் வரை முறையான அங்கீகாரமின்றி குறைக்கப்பட்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மூன்று மடங்கு நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு அழைக்கப்படாதிருந்ததுடன் ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி தொழிற்தகைமையற்ற 5 விண்ணப்பதாரர்கள் உரிய பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ii) ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி, நடாத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையின் போது சித்தியடைந்த புள்ளி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. விண்ணப்பதாரர்களின் தகைமைகளைக் காண்பிக்கின்ற மூலச்சான்றிதழ் பத்திரங்களின் நிழற்படப் பிரதிகள் மூலப் பிரதிகளுடன் ஒப்பிடப்பட்டு உண்மையான பிரதியென பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சேர்க்கப்பட்டிருந்த சில உத்தியோகத்தர்களின் தொழிற்தகைமைப் பரிசோதனையில் பெற்ற புள்ளிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஆட்சேர்ப்பு நடைமுறையின் 7.2.2.2 ஆம் பிரிவின் படி, விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுகின்ற தினத்தில் உரிய தொழிற்தகைமைகளை பெற்றிருக்க வேண்டும் இரண்டு உத்தியோகத்தர்களின் தொழிற்தகைமை சான்றிதழ்களைப் பரீட்சித்த போது அவை 2009 ஏப்ரல் 07 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அது வரையிலும் தொழிற்தகைமை நிறுவனம், ஏற்றுக்கொள்ளப்பட்ட

தொழிற்தகைமை நிறுவனமாக தேசிய தொழில் பயிற்சி அதிகாரசபையில் (NVQ) பதிவு செய்யப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(iv) உரிய துறையில் அனுபவமின்றிய 04 பேர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு அனுபவத்திற்காக 03 புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டிருந்தன. மேலும் நேர்முகப்பரீட்சையின் போது விளையாட்டுத் திறமைகள் உள்ள விண்ணப்பதாரர்களுக்காக புள்ளிகள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், விளையாட்டுத் திறமை தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சான்றிதழ் சமர்ப்பித்திராத மூன்று விண்ணப்பதாரர்களுக்காக புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தன.

(v) 2011 செப்தெம்பர் 01 ஆந் திகதி அமைய நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களினால் தொழிற் தகைமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக 2011 நவம்பர் 01 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, விளையாட்டு மருத்துவ நிறுவகத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களைப் பரிசீலித்த போது உரிய உத்தியோகத்தர்கள் நியமனத்தைப் பெற்ற திகதியின் போது தொழிற்தகைமைகளைப் பூர்த்தி செய்யாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2. தலைப்பு 219 – விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

---

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 13 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை,

பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுல்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

---

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றுக்களும் இங்கே (அ) இலிருந்து (ஐ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

---

மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளின் தமிழ் பிரதி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

---

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் முறையாக பேணப்படாதிருந்ததுடன் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாமையும் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (ii) கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் பதிவேடு | 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(இ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவின விடயம் 219-1-1-1102 இற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,000,000 தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 300,000 தொகை வேறொரு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 1,700,000 நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமல் முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 23 செலவின விடயங்களுக்கான தேறிய நிதி ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 20 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(ஈ) நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவுக் கூற்று**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலவின விடயம் 2012 இல் இறுதி மீதி ரூபா 2,520,956 ஆக இருந்ததுடன் 2013 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த மீதி ரூபா 2,464,929 என ரூபா 56,027 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(உ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 96,524,009 தொகையான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் தொடர்பாக காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 11 செலவின விடயங்களுக்குரிய சேமிப்பை விஞ்சிய ரூபா 181,372,838 பொறுப்புக்களுக்காக கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(ii) ஒதுக்கீட்டுக் கணக்கில் டீ.ஜீ.எஸ்.ஏ 8 இன் கீழ் பொறுப்புக்களாக ரூபா 384,308,793 கூட்டுத்தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் படி பொறுப்புக்கள் ரூபா 384,705,264 ஆக இருந்தது. அதன்படி டீ.ஜீ.எஸ்.ஏ 8 இன் கீழ் காண்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் பொறுப்புக்களுக்கிடையே ரூபா 396,471 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இடமாற்றம் கிடைத்து விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வருகைதந்த 4 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 180,990 கூட்டுத்தொகையான கடன் மீதி செலுத்தித் தீர்க்கப்படாமல் சீ.சீ.10 பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் நவம்பர் மாதம் முதல் அறவிடப்பட்ட கடன் தவணைப் பணம் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படாது மாதாந்த கணக்குப் பொழிப்பின் மூலம் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ii) திணைக்களப் புத்தகங்களின் படி முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆண்டின் இறுதி மீதி ரூபா 25,679,727 ஆக இருந்ததுடன் திறைசேரி அச்சிடல் பிரதியின் படி மீதி ரூபா 25,650,702 ஆக இருந்த போதிலும் ரூபா 29,025 வேறுபாட்டிற்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தால் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கடன் மற்றும் முற்பண மீதிகளைக் காட்டுகின்ற தனிநபர் மீதிகளின் பதிவேடு காலாண்டு ரீதியாக சமப்படுத்தி

தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2013 ஏப்ரல் மாதம் முதல் சேவைக்கு அறிக்கையிடாத மின் தொழில்நுட்பவியலாளரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 40,100 கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தனிநபர் மீதிகளின் பொழிப்பின் படி, மீதி ரூபா 12,501,746 ஆக இருந்ததுடன் கட்டுப்பாட்டுக் கணக்கின் படி மீதி ரூபா 25,679,727 ஆக இருந்தது. அதன்படி மீதிகளுக்கிடையே ரூபா 745,234 தொகையான வேறுபாட்டை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காது தனிநபர் மீதிகளின் பொழிப்பின் படியான மீதி ரூபா 25,679,727 ஆகக் காண்பித்து இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(v) மொழிபெயர்பாளராகக் கடமையாற்றிய உத்தியோகத்தரொருவர், வெளிநாடு சென்றிருந்தமையால் 2012 மார்ச் 23 ஆந் திகதி முதல் சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்ததுடன் அவரின் கடன் தவணைகளாக துனைவியின் சம்பளத்திலிருந்து அறவிட்டு அனுப்புவதற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு உடன்பட்டிருந்தது. அதன்படி 2013 ஒக்தோபர் மாதத்தின் போது 2012 மார்ச் முதல் 2013 ஆகஸ்ட் வரையான காலத்திற்காக ரூபா 36,282 தொகை மாதாந்த கணக்குப் பொழிப்பின் மூலம் தீர்க்கப்பட்டிருந்த போதிலும் அது கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**(எ) கட்டுநிதிக் கணக்குகள்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திறைசேரி அச்சிடல் பிரதியின் படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 1,754,058 ஆக இருந்ததுடன், ஒதுக்கீட்டுக் கணக்கின் படி மீதி ரூபா 634,808 ஆக இருந்தது. அதன்படி மீதிகளுக்கிடையே ரூபா 1,119,250 தொகையான வேறுபாடானது, தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 643,591 ஆகவும் கணக்கு பொழிப்பு தயாரித்தல் வழு ரூபா 475,659 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) காசேட்டின் படி, 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய கட்டுநிதி மீதி ரூபா 22,433 ஆக இருந்ததுடன் ஒதுக்கீட்டுக் கணக்கின் படி மீதி ரூபா 634,808 ஆக

இருந்தது. அதன்படி ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதி ரூபா 612,375 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஏ) பொது வைப்புக் கணக்கு**

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 88,440,221 தொகையான பொது வைப்பு தொடர்பாக நி.பி 570 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புப்பேரேடு, மாதாந்த கணக்குப் பொழிப்பு மற்றும் திறைசேரி அச்சிடல் பிரதிகளுக்கிடையே மீதிகளில் பின்வரும் வேறுபாடுகள் காணப்பட்டன.

| **விபரம்** | **வரவு வைத்தல்** | **செலவு வைத்தல்** | **இறுதி மீதி** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வைப்புப் பேரேட்டின் படி மீதி | 38,778,934 | 112,643,828 | 199,832,425 |
| மாதாந்த கணக்குப் பொழிப்பின் படி மீதி | 38,613,258 | 112,722,195 | 199,680,024 |
| திறைசேரி அச்சிடல் பிரதியின் படி மீதி | 38,613,259 | 112,720,164 | 200,074,436 |

(iii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொது வைப்பு பேரேட்டின் படி ஒதுக்கீட்டுக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த மீதி ரூபா 199,832,425 ஆக இருந்த போதிலும், தனிநபர் மீதிகளின் பட்டியல் படி 2014 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு முன்கொண்டுவரப்பட்ட மீதி ரூபா 200,145,505 ஆக இருந்தது. அதன்படி உரிய மீதிகளுக்கிடையே ரூபா 242,011 வேறுபாடு காணப்பட்டது.

**(ஐ) கணக்காய்விற்காக உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது ரூபா 9,473,691 கூட்டுத்தொகையான 55 உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**2.4.1 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் விளையாட்டுத்துறை அமைச்சின் கணக்காய்வுப் பிரிவினாலும் போதியளவு கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**2.5.1 வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎவ்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன் மேற்கொண்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 இணங்காமைகள்**

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (i) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை. XII ஆம் அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவு | திணைக்களத்தின் அங்கீகாரமின்றி தனிப்பட்ட ரீதியில் விண்ணப்பித்த எனினும் அவரது சொந்தப் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு அல்லது பதவியுயர்வு நடைமுறையின் கீழ் கூறப்படாத மற்றும் அவரின் பதவியுயர்வுகளுக்கும் உரித்தற்ற விளையாட்டுத்துறை நிர்வாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியொன்றைப் பின்பற்றுவதற்காக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதி விளையாட்டுத்துறை பணிப்பாளருக்கு முழுச் சம்பளத்துடன் விடுமுறை அங்கீகரித்து சம்பளம், அமையப் படிகள் மற்றும் வெப்ப ஆடை படிகளாக முறையே ரூபா 416,158 தொகை, ரூபா 120,375 தொகை மற்றும் ரூபா 16,578 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன. மேலும் கற்கைநெறிக் காலப்பகுதியின் போது இடையிடையே அவர் இலங்கைக்கு வருவதற்காகவும் போவதற்காகவும் விமானப் பயணச் சீட்டுக்களிற்காக ரூபா 130,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. |
| (XV) 11.1 ஆம் பந்தி | சகல உத்தியோகத்தர்களும் விமானப் பயணங்களின் போது சிக்கன வகுப்பில் பிரமாணம் செய்ய வேண்டியிருந்த போதிலும் பணிப்பாளர் நாயகத்தின் 2013 யூலை 06 ஆந் திகதி முதல் 03 நாட்கள் புருனை சுற்றுலாவிற்காக வணிக வகுப்பில் பிரயாணம் செய்திருந்ததுடன் அதற்கான விமானப் பயணக் கட்டணமாக ரூபா 82,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. |

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

---

| | |
|---|---|
| நிதிப் பிரமாணம் 110 | முறையாகத் தயாரிக்கப்பட்ட இழப்புக்களுக்கான பதிவேடொன்று திணைக்களத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப் பிரமாணம் 214 | பொறுப்புக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப் பிரமாணம் 341 | அடியிதழ் புத்தகங்களின் பெறுவனவு மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளைப் பதிவதற்காக பதிவேடொன்று பேணப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | நிதிப்பிரமாணத்திற்கு முரணாக 08 உத்தியோகத்தர்களுக்கு 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 30,000 முதல் ரூபா 200,000 வரையான வீச்சில் ரூபா 886,580 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| நிதிப் பிரமாணம் 372 | கட்டுநிதியும் உபகட்டுநிதியும் ஒவ்வொரு மாத இறுதியின் போதும் இணக்கஞ் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப் பிரமாணம் 395(இ) | மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்று அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஏப்ரல் மாதத்தின் பின்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப் பிரமாணம் 445 | திணைக்களத்தினால் பேணப்படுகின்ற வாக்குப்பணப் பேரேடு நாளது |

| | |
|---|---|
| | வரையாக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப் பிரமாணம் 565(3) | ஒவ்வொரு மாத இறுதியின் போதும் பொது வைப்புக் கணக்கு திறைசேரி அச்சிடல் பிரதியுடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப் பிரமாணம் 1645 | வாகனப் பொறுப்பு உத்தியோகத்தரினால் தமது பொறுப்பிலுள்ள ஒவ்வொரு வாகனங்களுக்காகவும் 267 ஆவது பொது மாதிரிப்படிவத்தின் பிரகாரம் வாகன சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் நாளது வரையாகப் பேணப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் 09 வாகனங்களுக்குரிய சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் பூரணப்படுத்தப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. |
| நிதிப் பிரமாணம் 1646 | வாகனப் பொறுப்பு உத்தியோகத்தரினால் உரிய மாதத்தின் நாளாந்த ஓட்ட அட்டவணை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் 268(அ) ஆம் பொது மாதிரிப் படிவத்தில் எழுதப்பட்ட பிரயாணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்பின் மூலப்பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 268(அ) மாதிரிப்படிவத்தில் எந்தவொரு வாகனம் தொடர்பாகவும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப் பிரமாணம் 1647(ஆ) | வாகனம் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பாக பூரணமான மெய்மையாய்வொன்று நடாத்தப்பட வேண்டியிருந்ததுடன் ஒரு |

| | | |
|---|---|---|
| | | உத்தியோகத்தரிடமிருந்து இன்னுமொரு உத்தியோகத்தருக்கு வாகனத்தின் பாதுகாப்பு கையளிக்கப்படுகின்ற போது அல்லது சாரதி தொடர்பாக மாற்றமொன்று ஏற்படுமிடத்து மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | 2007 செப்தெம்பர் 11 ஆந் திகதிய 21/2007 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை | பதவிநிலை உத்தியோகத்தரொருவர் நாட்டிற்கு வெளியே செல்லும் போது, பிரதமரின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் விளையாட்டுத்துறை நிர்வாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறிக்காக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டுத்துறை பிரதிப் பணிப்பாளர் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் வெளிநாடு சென்றிருந்தார். |
| (iv) | 2008 ஏப்ரல் 28 ஆந் திகதிய 431 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | வெளிநாட்டுப் பிரயாணங்களுக்கான விமானப் பயணச்சீட்டுக்கள் அரசாங்கத்தின் அங்கீகாரமளிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ரூபா 8,071,795 பெறுமதியான விமானப் பயணச்சீட்டுக்கள் தனியார் கம்பனியொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (v) | 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய நிதி, திட்டமிடல் அமைச்சுச் சுற்றறிக்கையின் 01/2010/01 ஆம் இலக்கத்தின் 3 (iii) ஆம் பந்தி | அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதற்காக கற்கை அல்லது பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக வெளிநாடு செல்கின்ற போது அமையப்படியாக படிகளாக நாளொன்றிற்கு செலுத்தவேண்டிய தொகை ஐக்கிய அமெரிக்க டொலர் 30 ஆக இருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மூன்று சந்தர்ப்பங்களின் போது |

| | | |
|---|---|---|
| | | நாளொன்றிற்கு 50 டொலர் வீதம் செலுத்தப்பட்டமையின் காரணமாக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ஐக்கிய அமெரிக்க டொலர் 880 ஆகும். |
| (vi) | 2006 சனவரி 25 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2 மற்றும் 8.12.3 ஆம் பந்திகள் | போட்டியாளர் கூறுவிலை கோரல் அல்லது குறிப்புரைகளின் படி உரிய பொருட்கள் வழங்கப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் பயிலுனர் குத்துச்சண்டை சங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் குத்துச்சண்டை மேடை கொள்வனவு செய்வதற்காக அந்த சங்கத்திற்கு ரூபா 4,525,360 தொகையொன்று 2013 மே 09 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. |
| (vii) | 1994 யூலை 12 ஆந் திகதிய 35/94 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 4.3.3 ஆம் பந்தி | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொறுப்புக்கள் உரிய நிறுவனங்களிலிருந்து உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 96,524,009 தொகையான பொறுப்புக்கள் தொடர்பில் மீதி உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்க வில்லை. |

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு நிதியேற்பாடு உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாது உரிய அதிகாரமின்றி ஏனைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(i) சுதந்திர சதுக்க விளையாட்டு மைதானத்தில் செயற்கை ஓடு பாதையை நிர்மாணிப்பதற்காக செலவின விடயம் 2-2-6-2104 இன் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 53,063,745 தொகையான நிதிஏற்பாடு அந்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாது வேறு செயற்பாடுகளுக்காக

பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிலும் இந்த செயற்பாட்டிற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகையும் ஏனைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) உரிய அதிகாரமின்றி உலோக சட்டத்துடன் கட்டிடமொன்று விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 35,478,778 தொகை ஏனைய 03 செலவின விடயங்களிலிருந்து மாற்றப்பட்டு செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) விளையாட்டுச் சங்கங்களுக்காக நிதி வழங்குதல்**

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் விளையாட்டுச் சங்கங்களுக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்படும் போது விளையாட்டுச் சங்கங்களிலிருந்து மதிப்பீடுகளை பெற்றுக்கொள்ளாமல் பாதீட்டு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) அநேக சந்தர்ப்பங்களில் விளையாட்டுச் சங்கங்களிலிருந்து செலவின மதிப்பீடுகள் பெற்றுக்கொள்ளப்படாமல் திணைக்களத்தினால் விளையாட்டுச் சங்கங்களுக்கு 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 145,548,064 தொகையான நிதி வழங்கப்பட்டிருந்தது. மேலும் உரிய சங்கங்களினால் அவை வினைத்திறனாகவும் வெளிப்படையாகவும் உரிய பணிகளுக்காக செலவிடப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் வழங்கப்பட்ட நிதியிலிருந்து எஞ்சியுள்ள நிதியை மீள அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 ஆம் ஆண்டில் 219-01-01-1508 என்ற ஏனைய செலவின விடயத்தின் கீழ் விமானப் பயணச்சீட்டுக்கள், பால்மா, யோகட் மற்றும் உணவு பானங்களுக்கான செலவினங்களும் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த செலவினங்களை அத்தகைய செலவின விடயத்தின் மூலம் செலவிடுவதற்குள்ள அதிகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளிநாட்டுப் பிரயாணச் செலவினம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 04 ஆந் திகதி இத்தாலியில் நடைபெற்ற விளையாட்டு மற்றும் திரைப்பட தொலைக்காட்சி விழாவிற்கு பங்குபற்றுதவற்காக அமைச்சரின் பிரத்தியேக பதவியணியின் ஊடக செயலாளருக்கு அமைய மற்றும் இணைந்த படிகளாக ரூபா 346,255 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த கொடுப்பனவிற்குரிய எந்தப் பதிவுகளும் திணைக்களத்தின் வாக்குப்பணப் பேரேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உரிய கொடுப்பனவுகள் 2001 ஏப்ரல் 04 ஆந் திகதிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்திக்கு முரணாக இருக்கின்றமையும் அவதானிக்கப்பட்டது.

(ii) 2013 ஒக்தோபர் 21 முதல் நவம்பர் 03 ஆந் திகதி வரை இத்தோனேசியாவின் ஜகார்த்தாவில் நடைபெற்ற CECS Level (iv) Course for middle and long distance பாடநெறிக்காக விமானப் பயணம், உணவு மற்றும் தங்குமிட செலவினங்களை வழங்கும் அடிப்படையில் ஒரு பயிற்றுவிப்பாளரை பங்குபற்றச் செய்யுமாறு ஒழுங்கமைப்பு நிறுவனம் அறிவித்த போதிலும் அதற்கு முரணாக திணைக்களத்தினால் மேலதிக உத்தியோகத்தரொருவர் பங்குபற்றச் செய்யப்பட்டிருந்தது. மேலும் அவர்களின் பிரயாணத்திற்குரிய செலவினங்கள் செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கும் போது விமானப் பயணம் மற்றும் தங்குமிட செலவினங்களாக ரூபா 225,632 தொகையும் அமையப்படியாக ரூபா 100,179 தொகையும் திணைக்களத்தின் வெளிநாட்டு பிரயாணச் செலவினங்களுக்கான செலவின விடயத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) 2013 செப்தெம்பர் 13 ஆந் திகதி முதல் நவம்பர் 21 ஆந் திகதி வரை தாய்லாந்தில் நடைபெற்ற 17 ஆவது சிரேஷ்ட பெண்கள் கரப்பந்து போட்டிக்காக பங்குபற்றச் செய்ய வேண்டிய குழுவிற்கு முரணாக பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசின் அடிப்படையில் உத்தியொகத்தரொருவர் அவதானிப்பாளராக பங்குபற்றியிருந்தார். கரப்பந்து சம்மேளத்தினால் பிரயாணத்திற்குரிய ரூபா 115,500 தொகையான செலவின மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போது அதனைக் கவனத்தில் கொள்ளாது திணைக்களத்தினால் ரூபா

438,800 தொகையொன்று அவதானிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 121,575 தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 317,225 தொகை கரப்பந்து சம்மேளனத்திற்கு அல்லது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்கு மீளச் செலுத்தப்பட்டிராததுடன் அதனை அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) வெளிநாட்டுப் பயிற்சிக்காக உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்காக முறையான நடைமுறையொன்று திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிராததுடன் உத்தியோகத்தர்கள் விளையாட்டுச் சங்கத்துடன் பேணுகின்ற தொடர்பின் அடிப்படையில் பல்வேறு பாடநெறிகளுக்காக அவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தர்களுக்கு திணைக்களத்தினால் கடமை விடுமுறையும் செலவினங்களுக்காக நிதியும் வழங்கப்பட்டிருந்தது.

**(ஈ) விளையாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்தலும் பகிர்ந்தளித்தலும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 நவம்பர் 29 ஆந் திகதிய பணிப்பாளர் நாயகத்தின் கிரீசங்தெ/நிஅக்ரி/02/14/2012 ஆம் இலக்க கடிதத்தின் படி 600 விளையாட்டுச் சங்கங்களுக்காக விளையாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும் 2013 யூலை 02 ஆந் திகதிய கேள்விச் சபைத் தீர்மானத்தின் படி 400 விளையாட்டுச் சங்கங்களுக்காக விளையாட்டுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 2,555,920 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் படி தேவைகள் உரியவாறு இனங்காணப்படாமல் விளையாட்டுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) 2013 யூலை 04 ஆந் திகதி வழங்கப்பட்ட விளையாட்டுப் பொருட்களிலிருந்து கரப்பந்து வலை மற்றும் இலகு பந்து கிரிக்கெட் மட்டைகள் தெரிவு செய்யப்பட்ட மாதிரியுடன் இணங்காதிருந்தமை பிரதி விளையாட்டு பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் போது மாதிரிக்கு இணங்காத கிரிக்கெட் மட்டைகள் நிராகரிக்கப்படாமல் களஞ்சியத்தினால் கையேற்கப்பட்டிருந்தது. அவ்வாறே மாதிரிக்கு இணங்காமையினால் கரப்பந்துகள் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும்

போது 2013 யூலை 16 ஆந் திகதி மாதிரிக்கு இணங்காத 100 கரப்பந்துகள் பெறப்பட்டிருந்தது.

**(உ) வலு மேம்படுத்தல் மண்டபத்திற்காக விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்**

---

தொழில்நுட்ப மதிப்பிட்டுக் குழுவினால் விளையாட்டு உபகரணங்கள் தனியார் நிறுவனமொன்றிலிருந்து ரூபா 1,479,000 தொகையில் கொள்வனவு செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய சிபாரிசினை அடிப்படையாகக் கொண்ட கேள்வி மதிப்பீட்டு அறிக்கை மற்றும் பொருட்களுக்குரிய குறிப்புரைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

---

திணைக்களத்தின் உடற்பயிற்சி நிலையத்தின் வருமானம் தேசிய விளையாட்டு நிதியத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட போதிலும் அதற்காக திறைசேரி அங்கீகாரமொன்று காணப்படவில்லை.

**2.9 முகாமைத்துவ நலிவுகள்**

---

திணைக்களத்தின் ஒட்டுமொத்த பதவியணினருக்காக ஒரு வெளிச் செல்லல் பதிவேடு மாத்திரம் பேணப்பட்டிருந்ததுடன் அலுவலகத்திற்கு வெளியே கடமைகளில் ஈடுபடுகின்ற பதவியணியினர்களில் அதிகமானோர் வெளிச் செல்லல் பதிவேட்டில் பதிவுகளை மேற்கொண்டிருக்கவில்லை.

**2.10 மனிதவள முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | வெற்றிடங்கள் | மிகைகள் |
|---|---|---|---|---|---|
| | | ஊழியர் எண்ணிக்கை | | | |
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 09 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 02 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 254 | 191 | 63 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 52 | 32 | 20 | - |
| (v) | ஏனையவை (அமைய அடிப்படை) | - | 14 | - | 14 |
| | மொத்தம் | 325 | 248 | 91 | 14 |

(ஆ) பதவியணினரில் 113 அங்கத்தவர்களுக்குரிய விடுமுறைப் பதிவேட்டின் பரீட்சிப்பின் போது உத்தியோகத்தர்களினால் முன்னைய ஆண்டுகளின் போது பெறப்பட்ட விடுமுறைகளை இலகுவாக இனங்காணக்கூடிய வகையில் அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை. மேலும் வருடாந்தம் புதிய விடுமுறைப் பதிவேடொன்று பேணப்பட்டிருந்ததுடன் அதில் முன்னைய ஆண்டுகளின் விடுமுறைகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3. விளையாட்டுச் சங்கங்கள்

### 3.1 இலங்கை கிரிக்கெட் நிறுவனம்

#### 3.1.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 6,073,103,419 கிரயமான நிலையான சொத்துக்களுக்காக நிலையான சொத்துப்பதிவேடொன்று பேணப்படாதிருந்ததுடன் முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட எனினும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆர். பிரேமதாச கிரிக்கெட் விளையாட்டு மைதானத்திற்காக சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 26,325,045 தொகையான வாடகை கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட வாடகைச் செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய வாடகை என்பன அந்தப் பெறுமதியினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 3.1.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் கிரிக்கெட் சங்கத்திற்கு 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 15 மில்லியன் கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. அதன் ஆரம்ப கடன் தொகையிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 5,022,704 தொகை மற்றும் ரூபா 2,358,879 தொகையான தாமதக் கட்டணம் என்பன 2014 நவம்பர் 26 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்பட்டிருக்கின்ற ரூபா 2,825,691,664 தொகையான பொறுப்புக்கள் 2014 யூலை 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆசிய கிரிக்கெட் சபை மற்றும் 05 வெளிநாட்டு கிரிக்கெட் சபைகளின் இலங்கை சுற்றுலாவிற்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் செலவிடப்பட்ட ரூபா 12,761,314 தொகை உரிய நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 189,795,545 கூட்டுத்தொகையான பெற வேண்டிய அனுசரணையாளர் கட்டணங்களில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 6,621,071 மீதியொன்று காணப்பட்டதுடன் அவற்றை அறவிடுவதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தவறியிருந்தது.

(உ) நான்கு வெளித்தரப்பினர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 5,622,417 தொகையான அறவிடவேண்டிய களியாட்ட வரி 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.1.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே காண்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு விடயங்களுக்கும் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் இன்மையின் காரணமாக அந்த விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | கிரிக்கெட் உதவி | 4,999,332 | விரிவான பட்டோலைகள் |
| (ii) | மதியுரைச் சேவைக் கட்டணம் | 9,812,100 | மதியுரையாளரைத் தெரிவு செய்யும் அடிப்படை மற்றும் ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான அங்கீகாரம் |
| (iii) | சட்டத்தரணிகள் கட்டணம் | 7,317,858 | சட்டத்தரணிகளைத் தெரிவு செய்யும் நடைமுறை |

### 3.1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

மீளாய்வாண்டின் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவையின் நிதிப் பிரமாணம் 756 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.3 ஆம் பந்தி | நட்டம் பெறுகின்ற நிறுவனத்தினால் செலுத்தப்படுகின்ற மிகையூதியப் படி ரூபா 1,000 உச்ச எல்லைக்கு வரையறுக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது ஒருவருக்கு ரூபா 8,250 முதல் ரூபா 500,000 வரையான வீச்சில் மிகையூதியப்படி செலுத்துவதற்கு ரூபா |

| | | |
|---|---|---|
| | | 38,068,010 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் ஒருவருக்கு ரூபா 2,500 முதல் ரூபா 20,000 வரையான விஷேட படி செலுத்துவதற்கு ரூபா 1,875,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டிக் கோவை | மீளாய்வாண்டின் போது ரூபா 780,638 பெறுமதியான சீசீரீவீ கெமரா முறைமையொன்று கொள்வனவு வழியாட்டிக் கோவையின் ஏற்பாடுகளை பின்பற்றாது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |

### 3.1.5 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிமைத் தன்மையில்லாத வெலகெதர மற்றும் மொறட்டுவ கிரிக்கெட் விளையாட்டரங்கின் நிர்மாணத்திற்காக முறையே ரூபா 33,804,033 தொகை மற்றும் ரூபா 1,347,789 தொகைகள் செலவிடப்பட்டிருந்தன. இந்தக் கிரயம் 2009 ஆம் ஆண்டு முதல் கணக்குகளில் நடை முறை வேலையாக மூலதன வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பிரதான பயிற்றுவிப்பாளர்களுடனான உடன்படிக்கை, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் பயிற்றுவிப்பாளரின் சம்பளம் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக முறையே ரூபா 4,172,294 மற்றும் ரூபா 2,252,417 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் 03 மாத சம்பளமாக ரூபா 4,776,440 தொகையும் இழப்பீட்டுப் பணமாக ரூபா 15,421,478 தொகையும் செலுத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு ஏற்பட்டிருந்தது. அதன்படி உடன்படிக்கை ஒரே தடவையில் இரத்துச் செய்யப்பட்டமையின் காரணமாக இலங்கை கிரிகெட் நிறுவனத்திற்கு மேலதிகமாக செலவிடுவதற்கு ஏற்பட்டிருந்த தொகை ரூபா 6,608,559 ஆகும்.

**3.1.6 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் தனியார் கணக்காய்வு நிறுவனமொன்றிற்கு 2011 ஆகஸ்ட் 04 ஆந் திகதி ரூபா 342,720 முற்பணத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிலையான சொத்துப் பதிவேடு 2014 நவம்பர் 26 ஆந் திகதி வரையிலும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு எதிராக வெளித்தரப்பினராலும் வெளித்தரப்பினருக்கு எதிராக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினாலும் தொடரப்பட்ட வழக்குகளுக்காக ஆஜராகிய சட்டத்தரணிகளுக்கு ரூபா 21,719,000 தொகையான சட்டக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய சட்டத்தரணிகள் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் 2012 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் 10 மாத காலத்திற்காக பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரின் சேவை உடன்படிக்கை, உடன்படிக்கைக் காலம் பூரணமடைவதற்கு முன் ஒரே தடவையில் இரத்துச்செய்யப்பட்டமையின் காரணமாக பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தரால் ரூபா 50,000,000 தொகையான இழப்பீட்டுத் தொகை கோரி தொழில் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் அது 2014 நவம்பர் 26 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 ஆம் ஆண்டின் போது போட்டியொன்று இரத்துச் செய்யப்பட்டமையின் காரணமாக காப்புறுதிக் கம்பனியிலிருந்து ரூபா 1.3 பில்லியன் நட்டஈடு கோரப்பட்டிருந்ததுடன் அந்தக் கம்பனிக்குரிய கொடுப்பனவுகள் மறுக்கப்பட்டமையின் காரணமாக தொடரப்பட்ட வழக்கொன்றிற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 11,369,716 தொகை சட்டத்தரணிகளின் கட்டணமாக செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(உ) 2012 யூலை 15 ஆந் திகதி முதல் ஆரம்பிக்கும் வகையில் 3½ மாதங்களிற்காக இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் கட்டமைப்பை மீளத்தயாரிப்பதற்காக

உதவுவதற்கும் நியமிக்கப்பட்ட விஷேட மதியுரையாளருக்கு மதியுரைக் கட்டணம் மற்றும் ஏனைய செலவினமாக முறையே ரூபா 12,925,695 மற்றும் ரூபா 2,507,462 ஆக ரூபா 15,433,157 கூட்டுத்தொகையானது இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், மதியுரையாளரால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகளை சீராக்குவதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.1.7** சர்வதேச தொலைக்காட்சி ஒளிபரப்பு, வானொலி, இணையம், அனுசரணையாளர்கள் மற்றும் தொலைக்காட்சி உற்பத்தி உரிமை (T/20, ODI மற்றும் டெஸ்ட் போட்டி உடன்படிக்கை 2013 – 2020 வரை) தொடர்பாக தொழில்நுட்ப மற்றும் நிதி மதிப்பீட்டைச் செய்வதற்கு தனியார் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.1.8** 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது 2013-T-20 லீக் சம்பியன் கிரிகெட் போட்டித் தொடரின் அனுசரணையாளர் ஒப்பந்தம் ரூபா 5,000,000 தொகையான ஒப்பந்தம் செய்யப்பட்ட தொகைக்கு தலைமை நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்திற்கும் இலங்கை கிரிகெட் நிறுவனத்திற்குமிடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கையின் 2.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்தம் செய்யப்பட்ட தொகையில் 50 சதவீதம் உடன்படிக்கையில் கைச்சாத்திடுகின்ற சந்தர்ப்பத்தின் போது அறவிடவேண்டியிருந்த போதிலும் 07 வாரங்கள் தாமதமடைந்திருந்தும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த உடன்படிக்கையின் 2.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் எஞ்சிய 50 சதவீதம் பணமும் போட்டித் தொடர் முடிவடைந்ததன் பின்னர் அறவிட வேண்டியிருந்த போதிலும் அது 2013 திசெம்பர் 31 ஆந் திகதிய வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.1.9** இலங்கை கிரிகெட் நிறுவனத்திற்கும் சீருடை அனுசரணையாளர் நிறுவனத்திற்குமிடையேயான உடன்படிக்கையில் 2010 சனவரி 01 ஆந் திகதி முதல் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான அனுசரணைக்காலத்திற்கு மேலதிகமாக கட்டணமொன்று அறவிடப்படாது 06 மாதங்களுக்காக நீடிக்கப்பட்டிருந்தது. மேலும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் கைச்சாத்திடப்பட்ட புதிய அனுசரணைகளின் உடன்படிக்கை காலம் 2013 ஒக்தோபர் 01 முதல் 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி ஆக இருந்தமையால்2013 சனவரி 01 முதல் 2013 ஒக்தோபர் 30 வரையான 09 மாத காலத்திற்குரிய அனுசரணைப் பணத்தை அறவிடுவதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் முடிந்திருக்கவில்லை.

**3.1.10 மனித வள அபிவிருத்தி**

---

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 1,460,000 தொகை செலவில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு அனுப்பி தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டம் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டு அதன்படி நடவடிக்கை எடுக்காது ஊழியர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.1.11 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) உள்ளகக் கணக்காய்வு**

---

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் தனிப்பட்ட உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாது கணக்காய்வுச் செயற்பாடுகள் தனியார் கணக்காய்வு நிறுவனமொன்றிற்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டிற்குரிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு காலரீதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கொள்வனவுத்திட்டம்**

---

கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2003 சனவரி 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தியின் பிரகாரம் பதவி நிலைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு உரிய கணக்காண்டு முடிவடைவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர்

தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் படி தொழிற் தகைமைக் கட்டணத்திற்காக ரூபா 1,550,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக ஏற்பட்ட செலவினம் ரூபா 15,150,850 ஆகும். அதன்படி உள்ளபடியான செலவினம் பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை விட 877 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**3.2 இலங்கை மெய்வல்லுனர் விளையாட்டுச் சங்கம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற Asian Grand Price Series போட்டிக்கு பங்குபற்றிய வெளிநாட்டு போட்டியாளர்களுக்காக இலங்கை மெய்வல்லுனர் விளையாட்டுச் சங்கத்தின் மூலம் செலுத்தப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 4,298 (ரூபா 568,797) தொகை பின்னர் அவர்களிடமிருந்து அறவிடப்பட்டு வங்கியில் வைப்பிலிடப்படாமல் விமான பயணச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா 31,674 தொகையான தளபாடங்களும் பொருத்துக்களும், ரூபா 672,270 தொகையான அலுவலக உபகரணங்கள், ரூபா 3,023,858 தொகையான மெய்வல்லுனர் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ரூபா 34,525 தொகையான சமயலறை உபகரணங்கள் என்பவற்றுக்குரிய நிலையான சொத்துப் பதிவேடொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டின் போது பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த அறிக்கைகளில் சிபாரிசு செய்யப்பட்டவைகள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.3 இலங்கை குதிரைச் சவாரியாளர் சங்கம்**

---------------------------------------------------------------

ரூபா 257,762 தொகையான குதிரைகளுக்கான உணவுகளின் கொள்வனவுடன் தொடர்புடைய விலைப்பட்டியல்கள் இல்லாமை காரணமாக கணக்காய்வின் போது திரப்திகரமானதாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

**3.4 கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

-----------------------------------------------

2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 18 சங்கங்களினால் இறுதிக் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.